# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 08.08.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :**

இறைவனது ஒரு பண்பு **முஹைமின்** என்பதாகும். அகராதி வல்லுநர்கள் இந்த சொல்லுக்கு பல்வேறு பொருள்களைத் தந்துள்ளார்கள். அவற்றை நான் உங்கள் முன்னால் வைக்கின்றேன். லிஸானுல் அரப் ஒரு அகராதி நூலாகும். இதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

**அல் முஹைமின்** என்பது கடந்த கால வேத நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பண்பாகும். திருக்குர்ஆனில் **முஹைமின் அலைஹி** என்ற சொல் வந்திருக்கின்றது. இதற்கு அதன் மீது சாட்சி என்று பொருள். **முஹைமின்** என்பதற்கு சாட்சி என்ற பொருளும் மற்றவர்களை அச்சத்திலிருந்து காப்பாற்றி நிம்மதியை வழங்குபவன் என்ற பொருளும் இருக்கின்றது.

**அல் அஸ்ஹரி** புகழ்பெற்ற அகராதி வல்லுனராவார். **முஹைமின்** என்றால் **அமீன்** அதாவது நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றில் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்பவர் என்று இவர் பொருள் கொடுத்துள்ளார். சிலர் **முஹைமின்** என்ற சொல்லுக்கு **முஃதமின்** என்று பொருள் கொடுத்துள்ளார்கள். அதற்கு நம்பிக்கைக்குரியவனாக கருதப்படும் அந்த வல்லோன் என்று பொருள். **முஹைமினுன் அலைஹி** என்றால் படைப்பினங்களின் விஷயங்கள் தொடர்பாக கண்காணிப்பவன் அவர்களை பாதுகாப்பவன் என்று பொருள்.

**முஹைமின்** என்பதற்கு சிலர் **ரகீப்** என்று பொருள் கொடுத்துள்ளார்கள். அதற்கு கண்காணிப்பவன் என்று பொருள். திருக்குர்ஆன் **முஹைமினுன் அலைஹி** ஆக இருக்கின்றது என்பதற்கு இது கடந்த கால வேத நூல்களைக் கண்காணிக்கக் கூடியதாகவும் அதை பாதுகாக்கக்கூடியதாகவும் இருக்கின்றது என்ற ஒரு பொருளும் தரப்பட்டுள்ளது. சுஹைப் என்பவர் இவ்வாறு கூறுகின்றார்.

அடியான் இறைவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொள்ளும்போதும் ஸித்தீக்குகளின் பாதுகாப்பு வளையத்திற்குள் வந்துவிடும் போது அவரது உள்ளத்தை ஈர்க்கின்ற எந்த உலகப் பொருளும் இருக்காது. **முஹைமின்ய்யத்** என்ற சொல் முஹைமினுடன் தொடர்புடையதாகும். இதற்கு ஸித்தீக்குகளுக்கு கிடைக்கும் மன நிம்மதி என்று பொருள். அடியான் இந்த உயர்வான தகுதியைப் பெறும்போது அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த உலகப் பொருளும் அவரை ஈர்க்காது. அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த பொருளையும் அவர் விரும்பவும் மாட்டார். இந்த மேற்கோள் லிஸானுல் அரப் –ல் உள்ளது.

**அல்காமூஸ்** என்ற அகராதியில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

**அல்முஹைமன்** என்பது அல்லாஹ்வின் பண்புகளில் ஒரு பண்பாகும். இது மூமின் என்ற பொருளில் வந்துள்ளது. அதாவது மற்றவர்களை அச்சத்திலிருந்து காப்பாற்றி அமைதியை வழங்குபவன் என்பது அதற்குப் பொருளாகும். அக்ரபுல் மவாரித் என்பது ஒரு அகராதி நூலாகும். இதில் **முஹைமின்** என்பது அல்லாஹ்வின் பண்புப் பெயராகும். இதற்கு **அமீன்** அதாவது அமைதியை வழங்குபவன் அல்லது கண்காணிப்பவன் என்று பொருள். **அல் முஃதமின்** என்றும் இதற்கு பொருளுண்டு. அதற்கு எவரிடம் பொருள்கள் நம்பி ஒப்படைக்கப்படுகின்றதோ அவர் என்று அதற்குப் பொருள். எவர் நம்பிக்கைக்குரியவராக கருதப்படுகின்றாரோ அவருக்கும் இந்த சொல் கூறப்படும். **அஷ்ஷாஹித்** அதாவது சாட்சி என்றும் இதற்கு பொருளுண்டு. தனது படைப்பினத்தின் செயல்கள் மற்றும் அவற்றின் உணவு, அவற்றின் வயதின் வரம்பு ஆகியவற்றை கண்காணித்து அவற்றை பாதுகாப்பவன் என்ற பொருளும் இதற்கு இருக்கின்றது.

திருக்குர்ஆனில் இந்த பண்பு இரு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. சூரா அல்மாயிதாவின் 49வது வசனத்திலும், சூரா அல் ஹஷ்ரின் 24 வது வசனத்திலும் இந்த பண்பு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வசனங்களை மேற்கோளாக வைத்து கடந்த காலத்திலுள்ள திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் இதற்கு சில பொருள்களைத் தந்து அவற்றை விளக்கிக் கூறியுள்ளார்கள். முதலில் நான் திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறும் கருத்துக்களைக் கூறி விடுகின்றேன்.

ஷேக் இஸ்மாயில் ஹக்கி அவர்கள் ரூஹுல் பயான் என்ற தஃப்ஸீரில் இவ்வாறு எழுதியுள்ளார்.

திருக்குர்ஆன் தொடர்பாக **முஹைமின் அலைஹி** என்று கூறப்பட்டிருப்பதன் கருத்து, பாதுகாக்கப்பட்ட எல்லா வேத நூல்களும் மாற்றங்களுக்கு ஆளாகாமல் இருப்பதை கண்காணிக்கக்கூடியதாக திருக்குர்ஆன் விளங்குகிறது. இந்த குர்ஆன் இப்போது அவற்றின் உண்மையையும் அவற்றின் ஆதாரத் தன்மையையும் அவற்றின் உறுதியையும் ஷரீஅத்தின் அடிப்படை விஷயங்களையும் அதன் கிளைகளையும் பற்றி சாட்சி கூறக்கூடியதாக இருக்கின்றது. ரத்தாக்கப்பட்ட பழைய ஷரீஅத்துகளின் கட்டளை களையும் அவற்றில் எஞ்சியிருப்பவற்றையும் பற்றிய சரியான தீர்வை திருக்குர்ஆன் எடுத்துக் கூறும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ் இறக்கியுள்ள இந்த இறுதி ஷரீஅத்தான திருக்குர்ஆனின் ஒவ்வொரு சொற்களும் உண்மையானவை. அவை அல்லாஹ்விடமிருந்து வந்தவையாகும். அவை பழைய வேதநூற்களை சாட்சிப்படுத்தக் கூடியதாகும். இப்போது உண்மை திருக்குர்ஆனில்தான் இருக்கின்றது. கடந்த கால வேதநூல்களில் உள்ள எந்த விஷயங்களை திருக்குர்ஆன் உறுதிப்படுத்தி சாட்சி கூறுகின்றதோ அவையே சரியான விஷயங்களாகும். ஏனென்றால் திருக்குர்ஆன் எல்லா வேதநூல்களின் மீதும் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பதாக திருக்குர்ஆன் கூறியிருக்கின்றது.

சூரா அல்மாயிதாவின் 49 வது வசனத்தின் ஆரம்பத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

நாம் உமக்கு உண்மையினைக் கொண்டுள்ள இந்த வேதத்தை இறக்கியுள்ளோம். இது தனக்கு முன்னுள்ள வேதத்தை நிறைவேற்றக் கூடியதாகவும் அதனை பாதுகாக்கக்கூடியதாகவும் உள்ளது. (5:49)

திருக்குர்ஆன் முன்னுள்ள வேதத்தை சாட்சிப்படுத்தக்கூடியதாகவும் அதனை பாதுகாக்கக்கூடியதாகவும் உள்ளது என்று கூறியதன் மூலம் அல்லாஹ், திருக்குர்ஆனும் உறுதியாக பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தை அதன் மூலமாக வழங்கியுள்ளான். இதற்கு முன்னுள்ள வேதநூல்கள் எப்போதும் மாற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கும் என்பதற்கான எந்த உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. ஆனால், திருக்குர்ஆன் இவற்றின் மீது கண்காணிப்பாளராகவும் அவற்றை பாதுகாக்கக்கூடியதாகவும் இருப்பதால் கண்காணிப்பாளராகவும் பாதுகாவலனாகவும் இருக்கும் நிலையில் திருக்குர்ஆனும் பாதுகாப்பாக இருக்கின்றது. இது தொடர்பாக இன்னொரு இடத்தில் தெளிவான சொற்களில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

**இன்னா நஹ்னு நஸ்ஸல்னஸ்ஸிக்ர வ இன்னா லஹூ ல ஹாஃபிஸூன்.** நாமே இந்த திக்ரை இறக்கினோம். நாமே இதை பாதுகாப்போம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.**

தனது வசனங்களை தானே பாதுகாப்பதாக இறைவன் கூறுகின்றான். இது உண்மையா? இல்லையா? என்று பாருங்கள். இறைவனின் வசனங்கள் மூலமாக எந்த போதனைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு எட்ட வைத்தார்களோ அது தொடர்ச்சியாக பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆனின் பாதுகாப்பு தொடர்பாக இறைவன் வழங்கியுள்ள இந்த வாக்குறுதி நமக்கு தெரிவிப்பது என்னவென்றால் முந்தைய வேதநூல்களிலுள்ள எந்த விஷயங்கள் பற்றி திருக்குர்ஆன் உறுதியான சாட்சி கூறுகின்றதோ அதுதான் உண்மையான விஷயங்களாகும். முஸ்லிம் அல்லாதவர்கள் திருக்குர்ஆன் கூறும் விஷயங்களை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவர்களில் மார்க்கத்தில் ஈடுபாடு கொண்டுள்ள ஒரு பெருங்கூட்டம் அவர்களது வேத நூலானது நூற்றுக்கு நூறு சதவீதம் அதன் அசல்

வடிவத்தில் இல்லை என்பதை ஏற்றுக் கொள்கிறது. மேலும் நூற்றுக்கு நூறு சதவீதம் அந்த வேதநூல் கூறுகின்றபடி செயல்படுவதற்கு எவரும் முயற்சி செய்வதில்லை. திருக்குர்ஆன் தொடர்பாகவும் இந்த மக்கள் அது அதன் ஆரம்ப நாளிலிருந்து இன்று வரை அதன் அசல் வடிவத்தில் இருப்பதாக ஏற்றுக் கொள்கின்றார்கள். சிலர் இவ்விஷயத்தில் சில சந்தேகங்களை ஏற்படுத்த முயற்சிகளை செய்தாலும் திருக்குர்ஆன் அதன் அசல் வடிவத்தில் இருப்பதை இவர்களால் மறுக்க முடியாது. அமெரிக்காவில் இது தொடர்பான முயற்சிகள் செய்யப்பட்டதை நான் கடந்த குத்பாவில் குறிப்பிட்டுக் கூறியிருந்தேன். ஆனால், திருக்குர்ஆனில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை. அது அதன் அசல் வடிவத்தில்தான் இன்று வரை இருந்து வருகிறது என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த விஷயம்தான் மற்ற வேத நூல்களிலிருந்தும் திருக்குர்ஆனுக்கு மேன்மையைப் பெற்றுத் தந்திருக்கின்றது.

இங்கு திருக்குர்ஆன் ஏனைய வேதநூல்களின் கண்காணிப்பாளராக இருக்கின்றது என்ற அதன் வாதம் உண்மையானது. இதற்கு முன்னுள்ள நபிமார்களின் சம்பவங்கள் இதில் எடுத்து கூறப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சம்பவங்களில் எதனை திருக்குர்ஆன் எடுத்து கூறியுள்ளதோ அவையே உண்மையான சம்பவமாகும். இதன் மூலம் தெரிய வரும் இன்னொரு கருத்து திருக்குர்ஆனின் போதனைகள்தான் நிரந்தரமானதும் எல்லா காலத்திற்கும் ஏற்ற போதனைகளாகவும் இருக்கின்றது. ஒவ்வொரு காலத்தின் நிலைமைகளுக்கு ஏற்ப இதைப் பற்றி சிந்திப்பவர்களுக்கு இதன் போதனைகளின் அற்புதங்களும் இரகசியமும் திறந்து தரப்படுகிறது. ஜமாஅத் அளவில் அல்லது சமுதாய அளவில் மட்டுமின்றி தனிப்பட்ட முறையிலும் எவர் இந்த வேத நூலை ஏற்றுக் கொண்டுள்ளாரோ அதைப் பற்றி சிந்திக்கின்றாரோ அவர் அதிலிருந்து பலன் பெறுகின்றார். ஆன்மீகமான முறையிலும் உலக ரீதியாகவும் ஒவ்வொரு நபரும் இதிலிருந்து பலன் பெற முடியும். எனவே, உண்மையான பலனைப் பெறுவதற்கு இதன் போதனைகளை ஏற்று செயல்படுவதன் மூலமாக ஒவ்வொரு நபரும் தனது ஈமானை வலுப்படுத்தக்கூடியவராக ஆகி விடுவார். அவர் இறைவனின் **முஹைமின்** என்ற பண்பிலிருந்து பலன் பெறுபவராக இருக்கின்றார்.

**இறைவன் பிரிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:**

ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்து தமது முழு கவனத்தையும் செலுத்துகிறார். எனவே, நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக் கொள்ள முயல்வதுதான் உங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும். (2:149)

இந்த திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்ப செயல்படுவதற்கு இந்த நன்மைகளின் பக்கம நாம் முழு கவனம் செலுத்த வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும். நன்மைகளுக்கு மற்ற விஷயங்களை விட முன்னுரிமை வழங்க வேண்டும்.

நான் குறிப்பிட்ட சூரா மாயிதாவின் அந்த வசனத்தின் ஆரம்பத்தில் கடந்த கால வேத நூல்களைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூறி அந்த வேதத்தை சார்ந்திருந்த மக்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட அந்த போதனைகளை மறந்து விட்டனர். அதன் விளைவாக அந்த வேதநூலில் மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. அதனால் அதன் அருட்கொடையிலிருந்து அந்த மக்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டார்கள். அந்த வேத நூல்களின் போதனைகளை மறக்காமலும் அதில் மாற்றங்கள் செய்யாமலும் அவர்கள் இருந்திருந்தால் அவர்கள் அவற்றின் அருள்களிலிருந்து புறக்கணிக்கப்பட்டவர்களாக ஆகியிருக்கமாட்டார்கள். இதன் விளைவாக யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டிருப்பார்கள். ஆனால், திருக்குர்ஆன் தொடர்பாக அல்லாஹ் இதில் எந்த மாற்றமும் ஏற்படாது என்று வாக்குறுதி வழங்கியுள்ளான். அதனை இறைவனே பாதுகாத்துள்ளான். ஒன்று இது எழுத்து வடிவில் பாதுகாப்பாக இருக்கின்றது. கடந்த 1500 வருடங்களாக அது பாதுகாக்கப்பட்டு வருகிறது. அடுத்து இலட்சக்கணக்கான ஹாஃபிஸ்களின் நெஞ்சங்களில் இது பாதுகாப்பாக இருக்கின்றது. பிறகு முஜத்திதுமார்கள் மூலமாக இதன் போதனைகளின்படி செயல்படுவதும் பாதுகாப்பாக இருந்திருக்கின்றது. இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வருகைக்குப் பிறகு இதன் போதனைகளின்

ஒளிமயமான அம்சங்களை அல்லாஹ் மேலும் தெளிவாக நமக்கு வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். எனவே, திருக்குர்ஆனின் போதனைகள் சீர்குலைந்து போகும் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால், அதைப் பின்பற்றுபவர்கள் சீர்குலைந்து போவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே, இந்த போதனைகளின்படி செயல்படும்படி ஒவ்வொரு நபருக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆன் கூறியுள்ள நற்செயல்களை செய்வதன் மூலமாகவே இறைவனின் பாதுகாப்பின் கீழ் நாம் இருக்க முடியும். திருக்குர்ஆன் கண்காணிப்பாளராக இருப்பதால் ஒவ்வொரு தீர்ப்பும் அதன் போதனைகளுக்கு ஏற்பவே இருக்க வேண்டும். நன்மைகளின் தரமும் திருக்குர்ஆன் கூறியிருப்பதற்கு ஏற்ப இருக்க வேண்டும்.

**பிறிதோரிடத்தில் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.**

**இன்னல்லதீனஹும் மின் ஹஸிய்யத்தி ரப்பிக்கும் முஸ்பிகூன்** – அவர்கள் தங்கள் இறைவனின் திகிலான தோற்றத்தைக் கண்டு அஞ்சுபவர்களாக இருக்கின்றார்கள்.

**தொடர்ந்து கூறுகின்றான்:**

**வல்லதீனஹும் பி ஆயாத்தி ரப்பிஹிம் யூமிநூன்** – அவர்கள் தங்கள் இறைவனுக்கு இணை வைக்கமாட்டார்கள்.

**வல்லதீன யுஃதூன மா அதவ்வ குலூபுஹும் வஜிலதுன் அன்னுஹும் இலா ரப்பிஹிம் ராஜிஊன்** – அவர்கள் எதை வழங்கினாலும் அவர்களது உள்ளம் நாம் நிச்சயமாக நமது இறைவனிடம் திரும்பச் செல்ல வேண்டியவர்களாக உள்ளோம் என்பதை நினைத்து அஞ்சுகின்ற நிலையில் தான் அவற்றை அவர்கள் வழங்குகின்றார்கள். இந்த சிறப்புப் பண்புகளை எடுத்துக் கூறிய பிறகு அல்லாஹ் கூறுகின்றான்.

**உலாயிக யுஸாரிஉன் ஃபில் ஹய்ராத்திஹும் லஹா சாபிகூன்** – இவர்கள்தான் நன்மைகளில் மிக வேகமாக முன்னேறுபவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் அதில் முன்னேறி செல்பவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த வசனங்களில் நன்மைகளில் முன்னேறிச் செல்பவர்களின் சில சிறப்புப் பண்புகள் கூறப்பட்டுள்ளன. முதலாவது வி-யம் உலகம் அவர்களின் குறிக்கோளாக இருக்காது. அவர்கள் தேடுகின்ற மிக முக்கியமான பொருள் இறைவனாவான். வெளிப்படையான சொற்களால் மட்டும் அவர்கள் இறைவனுடன் தொடர்புடையவர்களாக இருக்கமாட்டார்கள். மாறாக, இறைவன் மீதுள்ள அச்சம் அவர்களது உள்ளங்களில் நிலைபெற்று இருக்கும். அல்லாஹ்வின் திகில் அவர்கள் மீது இருக்கும். இந்த திகிலின் காரணமாகவும் அச்சத்தின் காரணமாகவும் இறைவனுடன் இருக்கின்ற தொடர்பின் காரணமாக அவனது கட்டளைகளை அவர்கள் நிறைவேற்றுகின்றார்கள். இறைவன் என்னைப் பார்க்கின்றான் என்பது எப்போதும் அவர்களது எண்ணங்களில் இருக்கும். அவர்கள் தங்கள் ஈமானில் முன்னேற முயற்சி செய்கின்றார்கள். அல்லாஹ்வின் எல்லா வசனங்களின்மீதும் அவர்கள் நம்பிக்கை கொள்கின்றார்கள். திருக்குர்ஆனின் எல்லா முன்னறிவிப்புகள் மீதும் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கும். திருக்குர்ஆன் என்றும் நிலைத்திருக்கும் ஒரு வேதநூலாகும். அது கடந்த கால வேதநூல்களிலுள்ள தவறுகளையும் சரி செய்திருக்கின்றது. அல்லது அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இஸ்லாம் உயிருடன் இருக்கின்ற அடையாளத்தை எதிர்காலத்திலும் அது வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றது. இந்த காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தோற்றமும் இறை அடையாளங்களில் ஒரு அடையாளமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மறுப்பதும்கூட அல்லாஹ்வின் அடையாளங்களை மறுப்பதாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் முந்தைய நபிமார்கள் மீதும் வேதங்கள் மீதும் அருள் செய்துள்ளது என்பதை நினைவில் வைக்க வேண்டும். கதைகளின் வடிவில் இருந்த அவர்களின் போதனைகளுக்கு அறிவின

வடிவத்தை திருக்குர்ஆன் வழங்கியிருக்கிறது. இந்த கதைகளால் எந்த நபரும் இரட்சிப்பை பெற முடியாது என்பதை உண்மையாகவே நான் உங்களுக்கு கூறுகின்றேன். திருக்குர்ஆனின் மகிமை **இன்னஹூம் ல கவ்லுன் ஃபஸ்லுன் வமா ஹுவ பில் ஹஸ்ல்** – நிச்சயமாக இது ஒரு தீர்ப்பளிக்கக்கூடிய வசனமாகும். ஒருபோதும் அது வீணான வசனமல்ல என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே, திருக்குர்ஆனை படிக்காமல் ஒருவர் இரட்சிப்பை பெற முடியாது. திருக்குர்ஆன் **முஹைமின்** ஆக அதாவது கண்காணிப்பாளராக இருக்கின்றது. அது குணமளிக்கும் தன்மையுடையதாகவும் அருளாகவும் இருக்கின்றது. எவர்கள் திருக்குர்ஆனை படித்து விட்டு அவற்றை கதைகளாக கருதுகின்றார்களோ அவர்கள் திருக்குர்ஆனை படிக்கவில்லை. மாறாக, அவர் திருக்குர்ஆனை அவமதிக்கின்றார். நமது எதரிகள் நம்மை எதிர்ப்பதில் ஏன் இவ்வளவு வேகமாக இருக்கின்றார்கள்? அல்லாஹ் கூறியிருப்பது போன்று திருக்குர்ஆன் முழுக்க முழுக்க ஒளியாகவும் ஞானம் நிறைந்ததாகவும் இறைஞானத்தை ஊட்டக்கூடியதாகவும் இருக்கின்றது என்பதை உலகத்திற்கு காட்ட விரும்புவதால்தான் இவர்கள் நம்மை எதிர்க்கின்றார்கள். அவர்கள் திருக்குர்ஆனுக்கு ஒரு சாதாரண கதையை விட எவ்வித மேன்மையையும் வழங்கக்கூடாது என்பதற்காக முயற்சிகளை செய்கின்றார்கள். நம்மால் இதை சகித்துக் கொள்ள முடியாது. திருக்குர்ஆன் உயிருள்ள ஒளிமயமான வேதம் என்பதை அல்லாஹ் நமக்கு திறந்து காட்டியுள்ளான். எனவே, நாம் அவர்களது எதிர்ப்பை ஏன் பொருட்படுத்த வேண்டும்? சுருக்கமாக, என்னுடன் தொடர்புள்ள இந்த மக்களிடம் நான் மீண்டும் மீண்டும் போதிப்பது என்னவென்றால், அல்லாஹ் இந்த இயக்கத்தை உண்மைகளை வெளிப்படுத்தவே நிலைநாட்டியுள்ளான். அது இல்லாமல் செயல் அளவிலான வாழ்வில் எந்த ஒளியும் பிரகாசமும் ஏற்பட முடியாது. செயல் அளவிலான உண்மை மூலமாக இஸ்லாத்தின் சிறப்பு உலகில் வெளிப்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். இறைவன் இதற்காகவே என்னை அனுப்பியுள்ளான். எனவே, திருக்குர்ஆனை அதிகமாக ஓதுங்கள். ஆனால், அதை கதைகளாக மட்டும் நினைக்காமல் தத்துவமாக கருதிப் படிக்க வேண்டும்.

நன்மைகளில் முன்னேறுபவர்கள் யாரென்றால் அவர்கள் யாரையும் அல்லாஹ்வுக்கு எதிரில் இணையாக வைக்கமாட்டார்கள் என்று கூறியுள்ளான்.

ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தின் நிலைமைகள் பற்றி குறிப்பிட்டு அல்லாஹ் சூரா ஜுமுஆவில் இதுபற்றி கூறுகின்றான். அதாவது மறைமுகமான ஷிர்க் முஸ்லிம்களிடம் எந்த அளவு தென்படும் என்றால் முஸ்லிம்கள் என்று தங்களை கூறிக்கொண்ட பிறகும் அவர்களுக்கு இறைவணக்கத்தின் பக்கம் கவனம் இருக்காது. வியாபாரங்களும் உள்ளத்திற்கு இன்பத்தை தரக்கூடிய பொருள்களும் அவர்களுக்கு தொழுகைகளை விட அதிகமாக ஈர்ப்புத்தன்மையால் நிறைந்திருப்பவையாக அவர்களுக்கு தெரியும். யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் போல அவர்கள் திருக்குர்ஆனின் போதனைகளை மறந்து விடுவார்கள். இதனால் இறைவணக்கம், பொருத்தமான நற்செயல்கள் ஆகியவற்றின் பக்கம் அவர்களுக்கு மிகவும் குறைவான கவனம்தான் இருக்கும். நாமும் நமது நஃப்ஸை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோமோ என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

நன்மைகளில் முன்னேறுபவர்கள் இரு கைகளாலும் தங்கள் செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வார்கள் என்ற அடையாளம் கூறப்பட்டிருக்கின்றது. ஆனாலும் இறைவன் விரும்புகின்ற அந்த உயர்வான தரத்திற்கேற்ப நாம் இருக்கின்றோமோ? இல்லையா? என்ற அச்சம் இறைவழியில் செலவு செய்பவர்களுக்கு இருக்கின்றது. அந்த உயர்வான தரத்திலிருந்து கீழே இறங்கி அல்லாஹ்வின் வெறுப்பை விலைகொடுத்து வாங்குபவர்களாக நாம் இல்லையே என்ற அச்சம் அவர்களிடம் இருக்கும். இந்த விஷயங்கள் மிக நுட்பமான நன்மைகளின் பக்கம் நமக்கு கவனமூட்டுகின்றன. அவற்றை பெறுவதற்கு மட்டுமின்றி அவற்றில் முன்னேற ஒரு மூஃமின் முயற்சி செய்கின்றார். அப்போதுதான் மனிதன் அந்த ஏக இறைவனின் அடைக்கலத்தின்கீழ் இருக்க முடியும்.

அல்லாமா தப்ரிஸி அவர்கள் சூரா அல் ஹஸ்ரின் 24வது வசனம் தொடர்பாக ஒரு ஹதீஸை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் எனது அன்பரான ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் இஸ்மே ஆஸம் (மகத்தான பெயர்) தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர்கள் சூரா அல் ஹஸ்ரின் இறுதி வசனங்களை அதிகமாக ஓதுவதை நடைமுறைப்படுத்துங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூ இமாமா (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்.

எவர்கள் சூரா அல் ஹஸ்ரின் இறுதி வசனங்களை இரவில் அல்லது பகலில் ஓதுவாரோ அந்த நிலையில் அதே இரவில் அல்லது பகலில் அவர் இறந்து விட்டால் அவருக்கு சொர்க்கம் கிடைப்பது உறுதியானதாகி விடும். அந்த இறுதி வசனங்கள் இவையாகும்.

**ஹுவல்லாஹுல்லதி லா இலாஹா இல்லாஹு ஆலிமுல் கைபி வஸ்ஸஹாதா ஹுவர்ரஹ்மானுர் ரஹீம்** – அவனே அல்லாஹ். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை. அவன் மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்துள்ளான். அவனே அளவற்ற அருளாளனான இறைவனாவான். அவனே மீண்டும் மீண்டும் கருணை காட்டும் இறைவனாவான்.

**ஹுவல்லாஹுல்லதீ லா இலாஹ இல்லல்லாஹு அல்மலிக்குல் குத்தூஸுஸ் ஸலாமுல் முஃமினுல் முஹைமினுல் அஸீஸுல் ஜப்பாருல் முதகப்பிர். சுப்ஹானல்லாஹி அம்மா யுஸ்ரிகூன்** – அவனே அல்லாஹ். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு இல்லை. அவன் அரசன்; தூயவன்; சாந்தியின் பிறப்பிடம்; பாதுகாப்பு அளிப்பவன்; கண்காணிப்பவன்; வல்லவன்; உடைந்த உள்ளங்களை இணைப்பவன்; மிக மேலானவன். அவர்கள் அவனுக்கு இணை வைக்கின்றவற்றிலிருந்து அல்லாஹ் தூயவன்.

**ஹுவல்லாஹுல் ஹாலிகுல் பாரிவுல் முஸவ்விரு லஹுல் அஸ்மாவுல் ஹுஸ்னா. யுஸப்பிஹு லஹு மா ஃபிஸ்ஸமாவாத்தி வல் அர்ழ் வஹுவல் அஸீஸுல் ஹகீம்** – அல்லாஹ்வே எல்லாவற்றையும் படைப்பவன். ஆக்குபவன் (எல்லாவற்றிற்கும் அவற்றின் நிலைக்கேற்ப) வடிவமைப்போன் ஆவான். மிகச் சிறந்த பண்பு பெயர்கள் பல அவனுக்கு இருக்கின்றன. வானங்களிலும் பூமியிலுள்ளவை எல்லாம் அவனது தூய்மையினை எடுத்துரைக்கின்றன. அவன் வல்லவனும் நுண்ணறிவுள்ளவனுமாவான். (59:23,24,25)

இங்கு இந்த வசனங்களை ஓதுவதனால் இரட்சிப்பு கிடைத்து விடும் என்பது இல்லை. நிச்சயமாக திருக்குர்ஆனை ஓதுவது ஒரு நல்ல பணியாகும். இதற்கான கட்டளை இருக்கின்றது. ஆனால் வெறுமனே ஓதுவதால் மட்டும் எந்தப் பலனும் ஏற்படாது.

அல்லாஹ்வின் பண்புகளை புரிந்தவாறு அதிலிருந்து அருளைப் பெற நாம் துஆ செய்யவில்லை என்றால அதனால் முழுக்க முழுக்க இறைவனுக்காக ஆகிய நிலையில் அவனை நாம் வணங்கவில்லை என்றால் நற்செயல்களை செய்வதன் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால் அதுவரை வெறுமனே திருக்குர்ஆன் வசனங்களை ஓதுவது எந்தப் பலனையும் தராது. பிறகு தூய்மையான உள்ளத்துடன் இறைவனது தஸ்ஃபீஹை செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனிடம் உண்மையான ஈமான் உருவாகிவிடும்போது அவனுக்கு நற்செயல்களில் ஒரு சிறப்பான இன்பம் கிடைக்கின்றது. அவனது இறைஞானத்தின் கண்கள் திறந்து விடுகிறது. அப்போது தொழ வேண்டிய உரிமைக்கு ஏற்ப அவன் தொழுகின்றான். பாவங்களிலிருந்து அவன் விடுபடுகின்றான். அல்லாஹ்வுடையதும் அவனது தூதருடையதும் மகிமையையும் மேன்மையையும் வெளிப்படுத்துவதற்காக தனது உள்ளத்தில் ஒரு குறிப்பான உணர்வும் துடிப்பும் அவனுக்கு இருக்கும். அப்படிப்பட்ட ஈமான் அவரை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் போல சிலுவையில் அறையப்படுவதிலிருந்தும் அவரை தடுக்காது. அவர் இறைவனுக்காக

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் போல நெருப்பில் விழுவதற்கு தயாராகி விடுவார். அவர் தனது விருப்பங்களை இறைவனின் விருப்பங்களுக்கு கீழ் கொண்டு வந்து விடும் போது நெஞ்சங்களிலுள்ளவற்றை நன்கு அறிந்துள்ள இறைவன் அவனை கண்காணிப்பவனாகவும் அவனது பாதுகாவலனாகவும் ஆகி விடுகின்றான். அவனை சிலுவையிலிருந்தும் உயிருடன் இறக்கி விடுகின்றான். நெருப்பிலிருந்தும் நல்ல விதமாக அவனை வெளியேற்றி விடுகின்றான். ஆனால், அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருப்பவர்தான் இந்த அற்புதங்களை பார்க்கின்றார்.

அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவரது ஈமானையும் முழுமையடையச் செய்து அதை மேலும் வளர்ச்சியடைய செய்வானாக. நாம் அல்லாஹ்வின் பண்புகளை சரியாக புரிந்து எப்போதும் நன்மைகளில் முன்னேறுபவர்களாக இருப்போமாக. அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருந்தவாறு அவனது உதவிகளின் காட்சியை கண்டுகொண்டே இருப்போமாக! ஆமீன்.

**இரண்டாவது குத்பாவிற்கு முன்பாக ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

காதியானிலுள்ள இரண்டு இளைஞர்கள் கடந்த சில நாட்களுக்கு முன் வஃபாஅத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹ் வஇன்னா இலைஹி ராஜிஊன். அவர்களில் ஒருவர் ஜாமியா அஹ்மதிய்யாவின் மாணவரான வஸீம் அஹ்மத். இவருக்கு வயது 21. காதியானுக்குப் பக்கத்திலுள்ள ஹருச்சுவால் என்ற நதியில் குளித்துக் கொண்டிருந்த போது தண்ணீரில் மூழ்கி இறந்து விட்டார். நன்றாக நீந்தத் தெரிந்தவர். பிறருக்கு நீந்த கற்றுக் கொடுத்தவர். தண்ணீரில் குதித்த சமயத்தில் தலை ஏதாவதொன்றில் மோதியதன் விளைவாக அவர் மயக்கமடைந்திருக்கின்றார். அதுபற்றி எவருக்கும் தெரியாமல் ஆகி விட்டது. இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பிறகு தான் உடல் கிடைத்தது. இலட்சத் தீவைச் சேர்ந்த இவருக்கு கடலில் குளிப்பதில் மிகுந்த திறமை இருந்தது. இவர் வஸிய்யத் செய்துள்ளார்.

இரண்டாவது நபர் மாணவரான ஹாஃபிஸ் அத்ஹர் அஹ்மத். இவர் நாயிப் அப்ஸர் ஜல்ஸா ஸாலானாவான மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் மஸ்ஹர் அஹ்மத் சாஹிபின் மகனாவார். ஆகஸ்டு 3 ஆம் தேதியன்று இஷா தொழுகைக்குப் பிறகு ஹாஃபிஸ் சாஹிப் தனது பிள்ளைகளுடன் தனது உறவினர் ஒருவரை அழைத்து வர பட்டாலா சென்றார்கள். திரும்பி வரும் வழியில் காதியானுக்கு இரண்டு அல்லது மூன்று கிலோ மீட்டர் முன்பாக சாலையோரத்தில் இருந்த ஒரு மரம் திடீரென்று ரோட்டில் சாய்ந்தது. இதனால் வண்டி மரத்தில் மோதியது. இந்த விபத்தில் அவரது மகன் வஃபாத் ஆகி விட்டார். மற்றவர்களுக்கும் கடுமையான காயம் ஏற்பட்டது. இவர் குர்ஆன் ஹாஃபிஸ் ஆவார். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இந்த வருடம் இவர் சேர்க்கப்பட்டார். அவருக்கு வயது 19.

அல்லாஹ் இரண்டு இளைஞர்களுடனும் மன்னிக்கும் தன்மையுடன் நடந்து அவர்களது தகுதிகளை உயர்த்துவானாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் இவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 08.08.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**